**இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜுலீ ஜே.சங்**

**அமெரிக்க - இலங்கை ஃபுல்பிரைட் ஆணைக்குழுவின் 70வது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெரிவித்த கருத்துக்கள்**

**2022, நவம்பர் 16**

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, கௌரவ விருந்தினர்கள், அமெரிக்க – இலங்கை ஃபுல்பிரைட் ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், மதிப்பிற்குரிய ஃபுல்பிரைட் பழைய மாணவர்கள், பங்குதாரர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் இனிய மாலை வணக்கம்.

இந்த வாரம் எமது இரு-நாட்டு ஃபுல்பிரைட் ஆணைக்குழுவின் 70ஆம் ஆண்டு நிறைவைக் குறிக்கிறது. 1952 நவம்பர் 17 ஆம் திகதி, எமது இரு நாட்டு அரசாங்கங்களும் ஒரு குறுகிய கால ஃபுல்பிரைட் பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பிப்பதற்கான ஒரு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன. பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர், 1964ஆம் ஆண்டில், அமெரிக்கத் தூதுவர் பிரான்சிஸ் வில்லிஸ் மற்றும் இலங்கையின் நிதியமைச்சர் டாக்டர். என்.எம்.பெரேரா ஆகியோர் அப்பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டத்தைப் புதுப்பித்து நிரந்தரமாக்குவதற்கான ஒரு ஒப்பந்தத்தில் இணைந்து கையெழுத்திட்டனர். எமக்கு முன் பதவிவகித்தவர்களின் தொலைநோக்குப் பார்வையின் காரணமாக, எமது பங்காண்மை மற்றும் அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான பரஸ்பர புரிந்துணர்வை ஊக்குவிப்பதற்கான அர்ப்பணிப்பு என்பன வலுவாக உள்ளன. ஃபுல்பிரைட் நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக, ஆயிரக்கணக்கானோர் எமது இரு நாடுகளிலும் கல்விகற்கவும், வாழவும், அறிவைப் பகிர்ந்து கொள்ளவும், தொழில்முறை உறவுகளை வளர்த்துக் கொள்ளவும் மற்றும் வாழ்நாள் முழுவதும் நீடிக்கும் நட்புறவுகளை வளர்த்துக் கொள்ளவும் அருமையான வாய்ப்பைப் பெற்றுள்ளனர். இவ்வாறான தொடர்புகள் மூலமாகவே அவர்கள் ஒரு நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்துகிறார்கள். 40 ஃபுல்பிரைட் முன்னாள் மாணவர்கள் அரச தலைவர்களாக பணியாற்றியுள்ளதுடன் 62 பேர் நோபல் பரிசு பெற்றுள்ளனர் என்பது உங்களுக்குத் தெரியுமா? இந்த நிகழ்ச்சிதிட்டத்தின் முக்கியத்துவத்தை நிரூபிப்பதற்கு நான் உங்களுடன் பகிர்ந்து கொள்ளக்கூடிய தனிப்பட்ட ஃபுல்பிரைட் வெற்றிக் கதைகள் பல உள்ளன, எனினும் அவற்றுள் இரண்டைப் பற்றி நான் பேச விரும்புகிறேன்.

இன்று மாலை எம்முடன் இணைந்திருக்கும் கலாநிதி பிரதீபா பண்டாரநாயக்கவைப் பற்றி உங்களுக்கு நான் கூறுகிறேன். பேராசிரியர், உங்களை மீண்டும் சந்திப்பதில் மகிழ்ச்சி. கலாநிதி பிரதீபா அவர்கள் மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிரி தொழில்நுட்பவியல் பேராசிரியராகவும், கண்டி பேராதனைப் பல்கலைக்கழகத்திலுள்ள விவசாய பீடத்தின் விவசாய உயிரி தொழில்நுட்பவியல் மத்தியநிலையத்தின் பணிப்பாளராகவும் உள்ளார். அவர் ஒரு “இரட்டை ஃபுல்பிரைட்டர்” எனும் சிறப்புத் தகுதியுடையவர். அவர் 2005ஆம் ஆண்டில் பட்டப்படிப்பிற்கான ஃபுல்பிரைட் உயர்புலமைப்பரிசிலை வென்றபோது, அவர்

டேவிஸில் உள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் ஒரே நேரத்தில் இரண்டு பட்டப்படிப்புகளில் இணைந்தார். அவரும் என்னைப்போன்ற சிந்தனைகளுடைய ஒருவராவார். அவரது ஃபுல்பிரைட் புலமைப்பரிசில் காலப்பகுதியில் தோட்டச்செய்கை மற்றும் உழவியலில் முதுமானிப் பட்டமும், உயிரி தொழிநுட்பவியலுக்கு முக்கியத்துவமளிக்கப்பட்ட தாவர உயிரியலில் கலாநிதிப் பட்டமும் பெற்றார். இலங்கையில் உணவுப் பாதுகாப்பிற்கு ஆய்வுகூடம் எவ்வாறு துணைபுரிகிறது என்பதை நான் அறிந்துகொண்ட AgBiotech மத்தியநிலையத்தில் பேராசிரியர் பிரதீபாவைச் சந்தித்தேன். அந்த அதிநவீன உயிரியல் பாதுகாப்பு ஆய்வுகூடம் இலங்கை விவசாயிகளுக்கும் மக்களுக்கும் இங்கு விளைவிக்கப்படும் உணவின் மீது நம்பிக்கை வைப்பதற்கு உதவுகிறது.

உலகளாவிய ரீதியில் உணவுப் பற்றாக்குறை காணப்படும் இன்றைய சூழலில் அது எவ்வளவு முக்கியமானதாக இருக்கிறது என்பதை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. பேராசிரியர் பிரதீபாவின் வழிகாட்டுதலின் கீழ், AgBiotech மத்தியநிலையத்தில் உள்ள இந்தச் செயற்திட்டம் மற்றும் இதுபோன்ற இன்னும் பல செயற்திட்டங்களின் ஊடாக, ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்ட, தரவுகளால் வழிநடாத்தப்படும் கொள்கை முடிவுகள் மற்றும் தயாரிப்பு அபிவிருத்தி ஆகியவற்றை மேற்கொள்ளும் இலங்கையின் திறன் பலப்படுத்தப்படுகிறது. இருப்பினும், இந்த அதிசயப் பெண்ணுக்கு இது போதாது! அவர் தற்போது ஆறு கலாநிதிக் கற்கை மாணவர்களையும் ஏழு முதுமானிப்பட்ட மாணவர்களையும் மேற்பார்வை செய்து வருவதால், அடுத்த தலைமுறை விஞ்ஞானிகள் மற்றும் ஆராய்ச்சியாளர்களில் அவர் ஒரு மாற்றத்தை உருவாக்கி வருகிறார். அவரது வழிகாட்டுதலின் கீழ் கல்வி கற்று, தற்போது இலங்கையின் கல்வி மற்றும் விஞ்ஞான முன்னேற்றங்களுக்கு பங்களிப்புச் செய்யும் மாணவர்களின் நீண்ட பட்டியலை இது இன்னும் நீளமாக்குகிறது. உலகிற்கு நல்ல செய்திகள் தேவைப்படும் இதுபோன்ற சமயங்களில், எதிர்காலம் என்பது பலசாத்தியங்களைக் கொண்டதாகவும், பல சந்தர்ப்பங்களில், எதிர்காலம் என்பது தற்போது எம்முன்னே உள்ளது எனவும் கலாநிதி பிரதீபா எனக்குக் காட்டினார். தலைமுறை தலைமுறையாக ஃபுல்பிரைட் அனுபவத்தின் பெறுமதியை நிரூபிப்பவர்கள் கலாநிதி பிரதீபா போன்ற அறிஞர்களே - அடுத்த தலைமுறை இலங்கை விஞ்ஞானிகளை வளர்ப்பதன் மூலம் அவர் அதை முன்னோக்கிக் கொண்டு செல்கிறார்.

எதிர்காலத்தைப் பற்றி பேசும்போது - நான் பழைய மாணவர்களின் அடுத்த தலைமுறையினைப் பற்றிப் பேச விரும்புகிறேன். KDU இன் தெற்கு வளாகத்திற்கென ஒதுக்கப்பட்ட ஒரு ஃபுல்பிரைட் ஆங்கிலக் கற்பித்தல் உதவியாளரே சியாரா போஸ்ட் ஆவார். சியாரா, உங்களை மீண்டும் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். பெருந்தொற்று காரணமாக அவர் இலங்கைக்கு வருவது தாமதமானபோதும் இளமானிப்பட்ட மாணவர்களுக்கு ஆங்கிலம் கற்பிக்கும் நடவடிக்கைகளில் அவர் விரைவிலேயே ஒன்றிவிட்டார். எம்மனைவருக்கும் தெரிந்தவாறே, ஆங்கிலம் என்பது, கல்விசார் வெற்றிக்கான ஒரு திறவுகோலாக காணப்படுவதுடன், வேலைக்கமர்த்தப்படுவதற்கான வாய்ப்பை அதிகரிக்கிறது மற்றும் பிராந்திய மற்றும் சர்வதேச சந்தையின் கேள்வியினைப்

பூர்த்தி செய்வதற்கான இலங்கையின் திறனையும் மேம்படுத்துகிறது. மேலும், இலங்கைத்தீவு, இந்தோபசிபிக் மற்றும் உலகம் முழுவதும் உள்ள சமூகங்கள் ஆகியவற்றை ஆங்கிலம் ஒன்றிணைக்கிறது. இந்த அற்புதமான நன்மைக்கு அப்பால், சியாராவின் சொந்த அமெரிக்க அனுபவங்கள் அவரது கற்பித்தல் மற்றும் வகுப்பறைக்கு வெளியே அவரது சமூக வாழ்க்கை ஆகியவற்றிற்கு ஒரு ஆழமான அர்த்தத்தைக் கொடுக்கிறது. ஃபுல்பிரைட் புலமைப்பரிசிலைப் பெற்ற இலங்கையர்கள் அமெரிக்காவிற்கு வருகைதந்து இலங்கையின் வளமான கலாச்சார மரபுரிமைகள், பழக்கவழக்கங்கள் மற்றும் வரலாறு தொடர்பான விழிப்புணர்வை அங்கு ஏற்படுத்துவது போல, சியாரா போன்ற மாணவர்கள் தமது தனிப்பட்ட வரலாறுகள், பன்முகத்தன்மை, அனைவரையும் உள்ளடக்குதல் மற்றும் அமெரிக்காவின் நவீன வாழ்க்கை பற்றிய தமது கருத்துக்களை தம்முடன் இங்கு எடுத்து வருகிறார்கள். 2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அவர் இங்கு வருகை தந்த சில நாட்களிலேயே, பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளுக்கு மத்தியில் ஜனநாயகம் செயற்பட்டதை சியாரா கண்ணுற்றார். இலங்கை மாணவர்கள் மற்றும் நண்பர்களுடன் அருகருகே வாழ்ந்த அவரது நேரடி அனுபவங்கள், ஜனநாயகம், நல்லாட்சி, அமைதியான போராட்டம், அமெரிக்கா மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளிலும் ஒருங்கிணைப்பு மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதாரம் என்பன தொடர்பாக காணப்படும் சிக்கல்களுக்கான தீர்வுகள் பற்றிய வெளிப்படையான உரையாடல்களுக்கான வாய்ப்புகளை வழங்கியது. ஃபுல்பிரைட் உருவாக்கும் நட்பின் அழகே அதுதான். சவால்கள் மற்றும் வெற்றிகளைப் பற்றி நண்பர்கள் வெளிப்படையாகப் பேச முடியும் மற்றும் ஃபுல்பிரைட் பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டத்தின் காரணமாக எமது இரு-நாட்டு ஆணைக்குழு மற்றும் பங்குதாரர்களின் உதவியுடன், எமது ஃபுல்பிரைட் புலமைப்பரிசிலைப் பெற்றுக்கொண்டவர்கள் கல்விச்சுதந்திரம் மற்றும் நேர்மையுடன் இலங்கையிலும் அமெரிக்காவிலும் அவ்வாறு வெளிப்படையாகப் பேச முடியும்.

ஃபுல்பிரைட் பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டத்திற்கும் அது ஏற்படுத்தும் மாற்றங்களுக்கும் நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். அமெரிக்க – இலங்கை ஃபுல்பிரைட் ஆணைக்குழுவினதும், அதன் பணிப்பாளர்கள் சபையினதும் அளப்பரிய முயற்சிகள் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் ஆதரவு ஆகியவற்றின் காரணமாகவே இருவழி கலாச்சார மற்றும் கல்விப் பரிமாற்றமானது கடந்த 70 ஆண்டுகாலமாக வெற்றிகரமாக நடைபெற்றது என்பதில் சந்தேகமில்லை. எமது வெற்றியினையும் பங்காண்மையினையும் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கு நாம் எதிர்பார்க்கிறோம். நன்றி.